செய்தி வெளியீடு எண்: 639 நாள்:26.09.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் முன்னிலையில் இன்று (26.9.2019) தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் 5,573 கோடியே 89 லட்சம் ரூபாய் முதலீட்டில் சுமார் 28,566 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் புதிய தொழில் திட்டங்களை துவங்கிட 15 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. மேலும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, 1,480 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான TATA Consultancy Services, Schwing Stetter India Pvt Ltd உட்பட 5 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 121 கோடியே 12 லட்சம் ரூபாய் முதலீட்டில், சுமார் 1280 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Niswin Foods Pvt. Ltd., JS Autocast Limited மற்றும் ITW India Pvt. Ltd., ஆகிய நிறுவனங்களின் வணிக உற்பத்தியைத் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக திகழச் செய்யவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் காரணமாக, தொழில் முனைவோர்கள் மற்றும் பெரும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் தமிழ்நாடு எப்போதும் முன்னிலை வகித்து வருகிறது.

அந்த வகையில், புதிய தொழில் திட்டங்களை துவங்கிட கீழ்க்கண்ட 15 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுதிடப்பட்டன:

1) கோயம்புத்தூரில் உள்ள R.K.G தொழிற் பூங்காவில், 50 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், MAHLE Electric Drives India Private Limited நிறுவனத்தின் Starter Motors and Controllers உற்பத்தி திட்டம்;

2) சென்னை, சோழிங்கநல்லூரில், 336 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 16,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Infosys Private Limited நிறுவனத்தின், தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு சேவைத் திட்டம்;

3) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, மஹிந்திரா தொழில் பூங்காவில், 79 கோடியே 82 லட்சம் ரூபாய் முதலீட்டில், சுமார் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த Nissei Electric India Pvt Ltd நிறுவனத்தின் மின்சார பணிக்கான உபரி பாகங்கள் உற்பத்தி திட்டம்;

4) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் வல்லம் – வடகால் தொழில் பூங்காவில், 69 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தென் கொரிய நாட்டைச் சேர்ந்த Younghwa Tech நிறுவனத்தின் மின்சார வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டம்;

5) காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம், Hiranandani Green Base Industrial and Logistics Park-ல், 626 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Vestas நிறுவனத்தின் காற்றாலை விசையாழி (Wind Turbines) உற்பத்தி திட்டம்;

6) தூத்துக்குடி மாவட்டம், மேலகரந்தையில், 250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Shree Vaari Energy Systems நிறுவனத்தின் காற்றாலை விசையாழி (Wind Turbines) உற்பத்தி திட்டம்;

7) திண்டுக்கல் மாவட்டம், கன்னியாபுரத்தில், 182 கோடியே 50 லட்சம் ரூபாய் முதலீட்டில், சுமார் 450 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Ambika Cotton Mills நிறுவனத்தின் ஆயத்த ஆடைகள் மற்றும் நூற்பாலை உற்பத்தி திட்டம்;

8) சென்னை, எண்ணூரில் 1,529 கோடியே 57 லட்சம் ரூபாய் முதலீட்டில், சுமார் 6600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Venkatesh Coke FTWZ நிறுவனத்தின் சிறப்பு வர்த்தக கிடங்கு மண்டலம் (Free Trade Warehousing Zone);

9) SHV Energy நிறுவனத்தால், 590 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கோயம்புத்தூர் –

கள்ளிப்பாளையத்தில் நிறுவப்படவுள்ள LPG Bottling Plant மற்றும் தூத்துக்குடியில் நிறுவப்படவுள்ள LPG Import Terminal Expansion திட்டங்கள்;

10) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூரில் 292 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், NDR Infrastructure Pvt Ltd நிறுவனத்தின் சிறப்பு வர்த்தக கிடங்கு /உட்கட்டமைப்பு மண்டலம் (Free Trade Warehouse/ Logistics);

11) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள மண்ணூரில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், J Matadee Free Trade Zone Pvt Ltd நிறுவனத்தின் சிறப்பு வர்த்தக கிடங்கு மண்டலம் (Warehousing);

12) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில், 118 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 391 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், BSH Household Appliance Manufacturing Pvt Ltd நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டம் (Research & Development);

13) காஞ்சிபுரம் மாவட்டம் – படப்பை, புதுக்கோட்டை மாவட்டம் – விராலிமலை மற்றும் சிவகங்கை மாவட்டம் – சிங்கம்புணரி ஆகிய 3 இடங்களில், 511 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், M M Forgings நிறுவனத்தின் ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டம்;

14) நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில், 390 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 475 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், PKPN தொழில் நிறுவனத்தின் நூற்பாலை மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் திட்டம்;

15) வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள மூடப்பட்ட தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தை மீண்டும் துவக்கும் வகையில், மத்திய அரசின் நவரத்தின நிறுவனங்களில் ஒன்றான பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் குத்தகை அடிப்படையில் 50 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்துடன் இணைந்து வெடிமருந்து தயாரிக்கும் திட்டம்;

என மொத்தம், 5,573 கோடியே 89 லட்சம் ரூபாய் முதலீட்டில், சுமார் 28,566 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புதிய தொழில் திட்டங்களை துவக்கிட 15 தொழில் நிறுவனங்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி,** 121 கோடியே 12 லட்சம் ரூபாய் முதலீட்டில், சுமார் 1,280 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கான வணிக உற்பத்தியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்:

- ✓ கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், கல்லாப்பாளையம் பகுதியில் 20 கோடியே 12 லட்சம் ரூபாய் முதலீட்டில் சுமார் 580 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் Niswin Foods Pvt. Ltd., நிறுவனத்தின் கோதுமை மாவு அரைக்கும் ஆலை;
- ✓ ஈரோடு மாவட்டம், சிப்காட் பெருந்துறை தொழிற்பூங்காவில் 39 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் J S Autocast Limited நிறுவனத்தின் இயந்திர வார்ப்பு (Raw and machine casting) தொழிற்சாலை;
- ✓ காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் வல்லம் – வடகால் தொழிற்பூங்காவில் 62 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ITW India Pvt Ltd நிறுவனத்தின் ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள் உற்பத்தி தொழிற்சாலை;

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி,** 1,250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 15,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்:

- ❖ காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் – சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்காவில் 900 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமையவுள்ள TATA Consultancy Services நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப திட்டம்;
- ❖ திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் – செய்யாறு தொழில் பூங்காவில் 350 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமையவுள்ள Schwing Stetter India Pvt Ltd நிறுவனத்தின் கட்டுமான உபகரணங்கள் தயாரிக்கும் திட்டம்.

மேலும், கீழ்காணும் சிப்காட் தொழிற்பூங்காக்களில் தொடங்கப்படும் திட்டங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்:

- காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட், வல்லம் – வடகால் தொழிற்பூங்காவில் 107 கோடியே 58 லட்சம் ரூபாய் முதலீட்டில் சுமார் 320 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமையவுள்ள Tsugami Precision Engg India Pvt. Ltd., நிறுவனத்தின் CNC Machine உபகரணங்கள் தயாரிக்கும் திட்டம்;
- வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை – சிப்காட் தொழிற்பூங்காவில் 64 கோடியே 62 லட்சம் ரூபாய் முதலீட்டில் சுமார் 130 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமையவுள்ள Alok Masterbatches Pvt. Ltd., நிறுவனத்தின் Masterbatches உற்பத்தி திட்டம்;
- திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் செய்யாறு தொழில் பூங்காவில் 58 கோடியே 50 லட்சம் ரூபாய் முதலீட்டில், சுமார் 350 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமையவுள்ள Galva Decoparts Pvt. Ltd., நிறுவனத்தின் Plastic Moulding and Chrome Plating உற்பத்தி திட்டம்;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் இன்று தொழில் துறை சார்பில் 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 3 தொழில் நிறுவனங்களின் வணிக உற்பத்தி துவக்கம், 5 தொழில் நிறுவனங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மூலமாக மொத்தம் 7,175 கோடியே 71 லட்சம் ரூபாய் முதலீடுகளும்,

45,846 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்பும் தமிழ்நாட்டில் ஏற்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., தொழில் துறை சிறப்புச் செயலாளர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு.ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வெடிபொருள் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. சி.காமராஜ் இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி–ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன் இ.ஆ.ப., மற்றும் தொழில் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**